15.06.2023

கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.

அமர்வு வழக்கு எண். 43/2021

அ.சா.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜோதி | | |
| த/பெ | வீராசாமி | மதம் | |
| கிராமம் | பள்ளிப்புதுப்பட்டு | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 36/2023 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் பள்ளிப்புதுப்பட்டில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 13.4.2019 தேதி நான் கரும்பு வெட்டும் வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வந்து நானும் எங்கள் ஊர் காளிதாஸ் த/பெ கலியமூர்த்தியும் பேசிக்கொண்டிருந்தபோது ராஜ்கிரன் இறந்த வழக்கு சம்மந்தமாக கண்டமங்கலம் காவல்நிலைய ஆய்வாளர் விசாரணை செய்தும் சம்பவ இடம் குறித்து பார்வை மகசர் மற்றும் வரைபடம் வரைந்ததில் நானும் காளிதாஸ் என்பவரும் கையொப்பம் இட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும். இது சம்மந்தமாக கண்டமங்கலம் காவல்நிலைய ஆய்வாளர் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

கையெழுத்து என்னிடம் வாங்கியது ஆய்வாளரா அல்லது உதவி ஆய்வாளரா என்று எனக்கு தெரியாது. எனது வீட்டில் வந்துதான் கையெழுத்து வாங்கினார்கள்.

இன்னொரு கையெழுத்தை காளிதாஸ் என்பவரிடம் அவரது வீட்டிற்கு சென்று வாங்கினார்கள். காளிதாஸ் கையெழுத்து போட்ட விபரம் எனக்கு தெரியாது. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது.